கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.32/2023

அ.சா. 4 (LW 8 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பழனிச்சாமி | **தொழில்** | |
| **த/ பெயர்** | நஞ்சுண்டப்பன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **12.02.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**(ஹிந்தி மொழிபெயர்ப்பாளர் பி.அரவிந்தன் முன்பு விசாரணை நடத்தப்பட்டது . விசாரணை மொழி பெயர்த்து எதிரிகளுக்கு ஹிந்தி மொழியில் விளக்கி சொல்லப்பட்டது. )**

1வது எதிரி ஆஜர் படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோயம்புத்தூரில் குடியிருந்து வருகிறேன். பன்னாரி மில்லில் HR மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். MA Social work படித்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 27.08.2022 அன்று காலை போலிசார் என்னை வெள்ளபொம்மனம்பட்டி ஏரியாவிற்கு வரச் சொன்னார்கள். ஆஜர் எதிரிகள் அங்கே தங்கியிருந்தார்கள். HR என்பது மில்லுக்கு ஆட்களை எடுப்பது சம்மந்தமானது வேலை ஆகும். ஆஜர் எதிரிகளை பெயர் பற்றிய விவரங்களை போலிசாரிடம் சொன்னேன். நான்தான் அவர்களைவேலைக்கு சேர்த்தேன். அனுபம் பௌரி, மகாவீர் திபர் ஆகும். அவர்களுக்கு மில்லில்வேலை செய்வதற்காக வேலைக்கு எடுத்து பணியில் அமர்த்தியிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

27.08.2022ம் வருடம் சுமார் காலை 09.00மணிக்கு போலிசார் எனது நிறுவனத்திற்கு போன் செய்ததால் நிறுவனத்தின் சார்பாக நான் வெள்ளபொம்மனம்பட்டிக்கு சென்றேன். ஏற்கனவே போலிசார் மேற்படி வடமாநில குடியிருப்பில் சுமார் 50பேர்கள் இருப்பார்கள். அவர்களை போலிசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். நான் போன போது எஸ்.ஐ, இன்ஸ்பெக்டர் இருந்தார்கள். எதிரிகள் மில்லில் எங்களிடம் வேலை செய்த விவரத்தை என்னிடம் கேட்டார்கள்.

நான் போலிசாரிடம் எதிரிகள் பற்றிய ஆவணங்கள் எதுவும் கொடுக்கவில்லை. எதிரிகள் இருவரும் நான் அவர்கள் குடியிருப்புக்கு நாளுக்கு 24, 25,26 ஆகிய தினங்களில் வேலைக்கு வழக்கம் போல் சிட்ப் வேலைக்கு வந்து சென்றார்கள். 24.08.2022 அன்றும் எதிரிகள் வேலைக்கு வந்து சென்றனர், அவர்கள் வேலைக்கு செல்லும் மில்லில் எவ்விதமான குறிப்பிடத்தக்க வகையில் எதை பற்றியும் பேசிக் கொள்ளாமல் வழக்கம் போல் தான் வேலை செய்து கொண்டிருந்தார்கள், எனக்கு எந்த விவரமும் தெரிய வரவில்லை. எதிரிகள் அங்கு இருந்தார்கள். என் முன்பாக காவல் ஆய்வாளர் அங்கிருந்த எதிரிகளிடம் அவர்கள் பற்றிய விவரங்களை என்னிடம் கேட்டு தெரிந்து கொண்டு வேறு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சென்று விட்டார்கள்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.02.12 21:16:41 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.